| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | மாவட்டம் : | புதுக்கோட்டை | காலம் : | 19/06/2024 | முதல் | 23/06/2024 |
| | அறிக்கை எண் : | 049/ 2024 | வெளியீட்டு நாள் : | | 18/06/2024 | |

## புதுக்கோட்டை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (13.06.2024 முதல் 17.06.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 23-06-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13/06 | 14/06 | 15/06 | 16/06 | 17/06 | தேதி | நாள்-1 19/06 | நாள்-2 20/06 | நாள்-3 21/06 | நாள்-4 22/06 | நாள்-5 23/06 |
| 0.6 | 0.0 | 0.0 | 0.0 | 2.8 | மழை (மி.மீ) | 2 | 2 | 0 | 1 | 1 |
| 36 | 34 | 36 | 38 | 38 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 38 | 38 | 37 | 38 | 38 |
| 27 | 27 | 27 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 27 | 26 | 27 | 27 |
| 6 | 6 | 6 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 6 | 5 | 4 | 7 |
| 76 | 72 | 72 | 67 | 74 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 60 | 60 | 60 | 60 | 70 |
| 61 | 48 | 42 | 44 | 44 | | 30 | 30 | 30 | 40 | 60 |
| 13 | 15 | 21 | 23 | 14 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 10 | 12 | 14 | 12 |
| தென் மேற்கு | தென் மேற்கு | வட மேற்கு | மேற்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென்மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 19, 20, 21 மற்றும் 23 தேதி மிக லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 37°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 26°-27° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 10 முதல் 14 கி.மீ வேகத்தில், தென்மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

### அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (21 - 27 ஜூன் 2024):

### மழைப்பொழிவு :

21-06-2024 - 27-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 34° செல்சியஸ் முதல் 38° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**விவசாயம் :**

இந்த பட்டத்தில் காய்கறி சாகுபடி செய்ய திட்டமிடும் விவசாயிகள் விதைப்பதற்கு முன்பு ஒரு ஏக்கருக்கு 200 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் தலா 1 கிலோ டிரைக்கோடெர்மா விரிடி மற்றும் சூடோமோனாஸ் கலந்து நிலப்பரப்பில் இடவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : நிலக்கடலை, கத்தரி, கால்நடை.**

**நிலக்கடலை:**

நிலக்கடலையில் வேரழுகல் நோயின் தாக்கத்தை கட்டுப்படுத்த, ஒரு கிலோ விதைக்கு ட்ரைக்கோடெர்மா விரிடி 5 - 10கிராம் மற்றும் பேசிலஸ் சப்டிலஸ் 10 கிராம் என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்து பயிரிடலாம்.

அல்லது ரசாயண முறையில் கார்பன்டசிம் 2 கிராம்/கிலோ என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும்.

**கத்தரி:**

ஜூன் மாதத்தில் கத்தரி சாகுபடி செய்யும் விவசாயிகள் கத்தரி நாற்றுக்களை நடுவதற்கு முன் களைக்கொல்லி இடுதல் அவசியம்.

களைகள் முளைக்கும் முன் அவற்றைக் கட்டுப்படுத்த, 500 லிட்டர் தண்ணீருக்கு ஒரு லிட்டர் என்ற அளவில் புளுகுளோரலின் என்னும் களைக் கொல்லியினை நன்கு கலந்து ஒரே சீராகத் தெளிக்க வேண்டும்.

இவ்வாறு களைக்கொல்லி தெளித்தவுடன் நீர் பாய்ச்சி நாற்றுக்களை நட வேண்டும்.

**கால்நடை:**

தற்போது நிலவும் பருவச்சூழலில் மாடுகளில் சப்பை நோய்; தாக்குதலுக்கான வாய்ப்புகள் உள்ளது. இந்நோய் காற்றின் ஈரப்பதம் கூடுதலாகவும் உள்ள பகுதிகளிலுள்ள மாடுகளைப் பெரும்பாலும் பாதிக்கிறது. இதுவும் ஓர் மழைக்கால நோயாகும். நல்ல ஆரோக்கியமான திடமான இளம் மாடுகளை 6 மாத வயது முதல் 3 ஆண்டு வயது வரை அதிகம் பாதிக்கிறது.

தொடை அல்லது முன்கால் சப்பை அல்லது கழுத்து போன்ற சதைப்பிடிப்புள்ள பகுதிகளில் வெப்பம் மிகுதியாகவும் வலியோடு கடினமான தன்மையுள்ள பெருத்த வீக்கமும் காணப்படும் தோலின் நிறம் கருப்பாக இருக்கும். இதன் காரணமாக மாடுகள் நடக்க முடியாமல் நொண்டும்.

நோய் அறிகுறிகள் தென்பட்டவுடன் மாட்டைப் தனியாக பிரித்துத் ஒதுக்குப்புறமாக வைத்துக் கண்காணிக்க வேண்டும்.

நோய்க் கண்ட 24 மணி நேரத்திற்க்குள் உடனடியாக கால்நடை மருத்துவரின் உதவியுடன் மருத்துவம் செய்ய வேண்டும் இல்லையேல் மாடுகள் இறந்து விடும். ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பே மாடுகளுக்குத் தடுப்பூசி போடுதல் அவசியம்.